**SEARCH ON GOOGLE OR YOUTUBE " SRMATHS OR RAVI MATHS TUITION CENTER "**

**மாதிரி வினாத்தாள் 1**

12th Standard

**கணிதவியல்**

Time : 03:00:00 Hrs

Total Marks : 90

20 x 1 = 20

1) |adj(adj A)| = $|A|^9$ எனில், சதுர அணி A-யின் வரிசையானது
(a) 3 **(b) 4** (c) 2 (d) 5

2) $(AB)^{-1} = \begin{bmatrix} 12 & -17 \\ -19 & 27 \end{bmatrix}$ மற்றும் $A^{-1} = \begin{bmatrix} 1 & -1 \\ -2 & 3 \end{bmatrix}$ எனில், $B^{-1}$=
**(a)** $\begin{bmatrix} 2 & -5 \\ -3 & 8 \end{bmatrix}$ (b) $\begin{bmatrix} 8 & 5 \\ 3 & 2 \end{bmatrix}$ (c) $\begin{bmatrix} 3 & 1 \\ 2 & 1 \end{bmatrix}$ (d) $\begin{bmatrix} 8 & -5 \\ -3 & 2 \end{bmatrix}$

3) $i^n + i^{n+1} + i^{n+2} + i^{n+3}$ –ன் மதிப்பு
**(a) 0** (b) 1 (c) -1 (d) i

4) |z| - z = 1 + 2i என்ற சமன்பாட்டின் தீர்வு
**(a)** $\frac{3}{2}$ **- 2i** (b) $\frac{-3}{2}$ + 2i (c) 2 - $\frac{3}{2}$i (d) 2 + $\frac{3}{2}$i

5) $x^3$+64 -ன் ஒரு பூச்சியமாக்கி
(a) 0 (b) 4 (c) 4i **(d) -4**

6) sin-1(cosx), 0≤ $x \le \pi$ -ன் மதிப்பு
(a) $\pi - x$ (b) $x - \frac{\pi}{2}$ **(c)** $\frac{\pi}{2} - x$ (d) $x - \pi$

7) சார்பு f(x)$\sin^{-1}(x^2-3)$ எனில், x இருக்கும் இடைவெளி
(a) [-1,1] (b) [$\sqrt{2}$,2] **(c)** $[-2,-\sqrt{2}] \cup [\sqrt{2},2]$ (d) $[-2,-\sqrt{2}] \cap [\sqrt{2},2]$

8) (1,5) மற்றும் (4,1) என்ற புள்ளிகள் வழிச் செல்வதும் y-அச்சைத் தொட்டுச் செல்வதுமான வட்டத்தின் சமன்பாடு $x^2+y^2-5x-6y+9+\lambda(4x+3y-19)=0$எனில் λ-ன் மதிப்பு
**(a)** $0, -\frac{40}{9}$ (b) 0 (c) $\frac{40}{9}$ (d) $\frac{-40}{9}$

9) $y^2$ =12x என்ற பரவளையத்தின் செவ்வகல முனைகளில் வரையப்பட்ட செங்குத்துக் கோடுகள் $(x-3)^2+(y+2)^2=r^2$ என்ற வட்டத்தின் தொடுகோடுகள் எனில் $r^2$ -ன் மதிப்பு
**(a) 2** (b) 3 (c) 1 (d) 4

10) $\vec{a} \times \vec{b}, \vec{b} \times \vec{c}, \vec{c} \times \vec{a}$ ஆகியவற்றை ஒரு புள்ளியில் சந்திக்கும் விளிம்புகளாகக் கொண்ட இணைகரத் திண்மத்தின் கன அளவு 8 கன அலகுகள் எனில், $(\vec{a} \times \vec{b}) \times (\vec{b} \times \vec{c}) \times (\vec{b} \times \vec{c}) \times (\vec{c} \times \vec{a})$ மற்றும் $(\vec{c} \times \vec{a}) \times (\vec{a} \times \vec{b})$ ஆகியவற்றை ஒரு புள்ளியில் சந்திக்கும் விளிம்புகளாகக் கொண்ட இணைகரத் திண்மத்தின் கன அளவு
(a) 8 கன அலகுகள் (b) 512 கன அலகுகள் **(c) 64 கன அலகுகள்** (d) 24 கன அலகுகள்

11) $\vec{r} = (\hat{i} + 2\hat{j} - 3\hat{k}) + t(2\hat{i} + \hat{j} - 2\hat{k})$ என்ற கோட்டிற்கும் $\vec{r}.(\hat{i} + \hat{j})$+4 = 0 என்ற தளத்திற்கும் இடைப்பட்ட கோணம்
(a) 0° (b) 30° **(c) 45°** (d) 90°

12) ஒரு கோளத்தின் கன அளவு வினாடிக்கு 3πசெமீ$^3$ வீதத்தில் அதிகரிக்கிறது. ஆரம் $\frac{1}{2}$ செ.மீ ஆக இருக்கும்போது ஆரத்தின் மாறுபாட்டு வீதம்
**(a) 3 செ.மீ/வி** (b) 2 செ.மீ/வி (c) 1 செ.மீ/வி (d) $\frac{1}{2}$செ.மீ/வி

13) $\lim_{x \to 0} \left(cotx - \frac{1}{x}\right)$ -ன் மதிப்பு
(a) 0 (b) 1 (c) 2 **(d) ∞**

14) $\sin^4 x + \cos^4 x$ என்ற சார்பு இறங்கும் இடைவெளி
(a) $\left[\frac{5\pi}{8}, \frac{3\pi}{4}\right]$ (b) $\left[\frac{\pi}{2}, \frac{5\pi}{8}\right]$ **(c)** $\left[\frac{\pi}{4}, \frac{\pi}{2}\right]$ (d) $\left[0, \frac{\pi}{4}\right]$

15) ஒரு வட்ட வடிவ வார்ப்பின் ஆரம் 10 செமீ. ஆரத்தின் அளவில் தோராயமாக 0.02 செமீ பிழை உள்ளது எனில் அதன் பரப்பில் ஏற்படும் தோராய சதவீதப் பிழையைக் காண்க.
(a) 0.2% **(b) 0.4%** (c) 0.04% (d) 0.08%

16) f(x) = $\frac{x}{x+1}$, எனில் அதன் வகையீடு
(a) $\frac{-1}{(x+1)^2}dx$ **(b)** $\frac{1}{(x+1)^2}dx$ (c) $\frac{1}{x+1}dx$ (d) $\frac{-1}{x+1}dx$

17) $\int_0^{\frac{2}{3}} \frac{dx}{\sqrt{4-9x^2}}$ இன் மதிப்பு
**(a)** $\frac{\pi}{6}$ (b) $\frac{\pi}{2}$ (c) $\frac{\pi}{4}$ (d) $\pi$

18) $\frac{d^2y}{dx^2} + \left(\frac{dy}{dx}\right)^{1/3} + x^{1/4} = 0$ எனும் வகைக்கெழுச் சமன்பாட்டின் வரிசை மற்றும் படி முறையே
**(a) 2, 3** (b) 3, 3 (c) 2, 6 (d) 2, 4

19) X எனும் சமவாய்ப்பு மாறியின் நிகழ்தகவு அடர்த் தி சார்பு  எனில், இவற்றில் எந்த கூற்று சரியானது?
(a) சராசரி மற்றும் பரவற்படி உள்ளது **(b) சராசரி உள்ள து ஆனால் பரவற்படி இல்லை** (c) சராசரி ,பரவற்படி இரண்டுமே இல்லை (d) பரவற்படி உள்ளது ஆனால் சராசரி இல்லை

20) (p ∧ q) ∨ ¬q -ன் மெய்மை அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது.

| p | q | (p ∧ q) ∨ ¬q |
|---|---|---|
| T | T | (a) |
| T | F | (b) |
| F | T | (c) |
| F | F | (d) |

பின்வருபவைகளில் எது உண்மை?

| (a) | | | | (b) | | | | **(c)** | | | | (d) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (a) | (b) | (c) | (d) | (a) | (b) | (c) | (d) | **(a)** | **(b)** | **(c)** | **(d)** | (a) | (b) | (c) | (d) |
| T | T | T | T | T | F | T | T | **T** | **T** | **F** | **T** | T | F | F | F |

7 மட்டும்.. Q. No 30 2x7=14

21) $\begin{bmatrix} cos\theta & -sin\theta \\ sin\theta & cos\theta \end{bmatrix}$ என்பது செங்குத்து அணி என நிறுவுக.

**Answer :** A= $\begin{bmatrix} cos\theta & -sin\theta \\ sin\theta & cos\theta \end{bmatrix}$ பின்பு, $A_T$= $\begin{bmatrix} cos\theta & -sin\theta \\ sin\theta & cos\theta \end{bmatrix}^T = \begin{bmatrix} cos\theta & sin\theta \\ -sin\theta & cos\theta \end{bmatrix}$

எனவே

$AA_T$= $\begin{bmatrix} cos\theta & -sin\theta \\ sin\theta & cos\theta \end{bmatrix} \begin{bmatrix} cos\theta & sin\theta \\ -sin\theta & cos\theta \end{bmatrix}$

= $\begin{bmatrix} cos^2\theta + sin^2\theta & cos\theta sin\theta - sin\theta cos\theta \\ sin\theta cos\theta - cos\theta sin\theta & sin^2\theta + cos^2\theta \end{bmatrix} = \begin{bmatrix} 1 & 0 \\ 0 & 1 \end{bmatrix}$ =$I_2$

இதைபோல் $A^TA=I_2$. எனவே $AA^T=A^TA=I_2$ ⇒ A ஆனது செங்குத்து அணியாகும்.

22) பின்வருவனவற்றை சுருக்குக.
$i\, i^2 i^3 \ldots\ldots i^{2000}$

**Answer :** = $i\,.\,i^2 i^3 \ldots\ldots i^{2000} = i^{1+2+3+\ +2000}$
= $i^{\frac{2000 \times 2001}{2}} [\because 1+2+3+\ldots n = \frac{n(n+1)}{2}]$
= $i^{1000 \times 2001} = i^{2001000}$ = 1
[ ∵ 2001000 என்பது 4 ஆள் வகுப்படும் அதன் கடைசி இரண்டு எண்களும் 4 ஆல் வகுப்படும்]

23) α,β,γ என்பவை $x^3+px^2+qx+r=0$ எனும் சமன்பாட்டின் மூலங்களாக இருந்தால் கெழுக்களின் அடிப்படையில் $\Sigma\frac{1}{\beta\gamma}$ -ன் மதிப்பைக் காண்க.

**Answer :** $x^3+px^2+qx+r=0$ எனும் சமன்பாட்டின் மூலங்கள் α, β, மற்றும் γ என்பதால்
$\Sigma_1$ α+β+γ=-p மற்றும் $\Sigma_3$ αβγ =-r
எனவே,
$\Sigma\frac{1}{\beta\gamma} = \frac{1}{\beta\gamma} + \frac{1}{\gamma\alpha} + \frac{1}{\gamma\beta} = \frac{\alpha+\beta+\gamma}{\alpha\beta\gamma} = \frac{-p}{-r} = \frac{p}{r}$.

24) x-ன் அனைத்து மதிப்புகளையும் காண்க
-10π≤ $x$ ≤10π மற்றும் sin x=0

**Answer :** கொடுக்கப்பட்ட sin x = 0
⇒ sin x = sin 0 ⇒ x = nπ, n ∈ z.
-10 π ≤ x ≤ 10π, n ஆனது -1 லிருந்து -10 லிருந்து + 10 எடுத்துக் கொள்வோம்.
∴ x = nπ, இங்கு n = 0, ±1, ±2, ±3, ±4, ±5, ±6, ±7, ±8, ±9, ±10

25) மையம் (-3,-4) மற்றும் ஆரம் 3 அலகுகள் கொண்ட வட்டத்தின் சமன்பாடு காண்க.

**Answer :** வட்டத்தின் திட்ட வடிவச் சமன்பாடு $(x-h)^2+(y-k)^2=r^2$
⇒ $(x-(-3))^2+(y-(-4))^2=3^2$
⇒ $(x-3)^2+(y+4)^2+(y+4)^2=3^2$
⇒$x^2+y^2$+6x+8y+16=0 இது பொது வடிவம் ஆகும்.

26) $2\hat{i}+3\hat{j}+\hat{k}$, $\hat{i}$-2$\hat{j}$+2$\hat{k}$, மற்றும் 3$\hat{i}$+$\hat{j}$+3$\hat{k}$ என்ற மூன்று வெக்டர்கள் ஒரு தள வெக்டர்களாகுமா எனக் காண்க.

**Answer :** $\vec{a}$=2$\hat{i}$+3$\hat{j}$+$\hat{k}$, $\vec{b}$ =$\hat{i}$-2$\hat{j}$+2$\hat{k}$, மற்றும் $\vec{c}$ = 3$\hat{i}$+$\hat{j}$+3$\hat{k}$
$\vec{a}, \vec{b}$ மற்றும் $\vec{c}$ ஒரு தள வெக்டர்கள் எனில் $\vec{a}.\left(\vec{b} \times \vec{c}\right) = 0$
கருதுக $\vec{a}.\left(\vec{b} \times \vec{c}\right)$

WHATSAPP – 8056206308

$= \begin{vmatrix} 2 & 3 & 1 \\ 1 & -2 & 2 \\ 3 & 1 & 3 \end{vmatrix} = 2\begin{vmatrix} -2 & 2 \\ 1 & 3 \end{vmatrix} - 3\begin{vmatrix} 1 & 2 \\ 3 & 3 \end{vmatrix} + 1\begin{vmatrix} 1 & -2 \\ 3 & 1 \end{vmatrix}$

= 2 (--6 - 2) -3 (3 - 6) + 1 (1 + 6)

= 2(-8) - 3(-3) + 1(7) = -16 + 9 + 7 = -16 + 16

=0.

ஆகையால் கொடுக்கப்பட்ட வெக்டர்கள் ஒரு தள வெக்டர்களாகும்.

27) இருமுனைகளிலும் காப்பிடப்பட்ட 10மீ நீளமுள்ள ஒரு கம்பியின் வெப்பநிலை செல்சியஸில் நீளம் x சார்பாக T = x (10-x) எனத் தரப்படுகிறது. கம்பியின் மையப்புள்ளிகளில் வெப்பநிலை மாறபாட்டு வீதம் பூச்சியம் என்பதை நிரூபிக்க.

**Answer :** T =10x-$x^2$ எனக் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே ஒரு முனையிலிருந்து எந்த அளவு தூரத்திலும் வெப்பநிலை மாறுபாட்டு வீதமானது

$\frac{dT}{dx} = 10 - 2x$ ஆகும். கம்பியின் மையப்புள்ளி x = 5 –ல் உள்ளது.

x = 5 எனப்பிரதியிட $\frac{dT}{dx} = 0$ எனக்கிடைக்கும்.

28) கீழ்க்காணும் எல்லைகளை , தேவைப்படும் இடங்களில் லோபிதாலின் விதியை பயன்படுத்தி காண்க :

$\lim_{x\to 0} \frac{2x^2-3}{x^2-5x+3}$

**Answer :** $\lim_{x\to\infty} \frac{2x^2-3}{x^2-5x+3}$ [$\frac{\infty}{\infty}$ தேரப்பெறா வடிவம்

லோபிதாலின் விதியைப் பயன்படுத்த,

$= \lim_{x\to\infty} \frac{4x}{2x-5}$ [$\frac{\infty}{\infty}$ தேரப்பெறா வடிவம்

$= \lim_{x\to\infty} \frac{4}{2}$ [லோபிதாலின் விதியைப் பயன்படுத்த,

= 2

29) கீழ்க்காணும் தொகையீடுகளை கூட்டலின் எல்லைகளாக கணக்கிடுக:

$\int_1^2 (4x^2-1)dx$

**Answer :** $f(x) = 4x^2 - 1, a = 1, b = 2$

$\int_a^b f(x)dx = \lim_{n\to\infty} \frac{b-a}{n} \sum_{r=1}^{n} f\left(a + (b-a)\frac{r}{n}\right)$

$\lim_{n\to\infty} \frac{2-1}{n} \sum_{r=1}^{n} \left(1 + \frac{r}{n}\right)$

$= \lim_{n\to\infty} \frac{1}{n} \sum_{r=1}^{n} \left[4\left(1+\frac{r}{n}\right)^2 - 1\right]$

$= \lim_{n\to\infty} \frac{1}{n} \sum_{r=1}^{n} \left[4\left(1+\frac{2r}{n}+\frac{r^2}{n^2}\right) - 1\right]$

$= \lim_{n\to\infty} \frac{1}{n} \sum_{r=1}^{n} \left[4+\frac{8r}{n}+\frac{4r^2}{n^2} - 1\right]$

$= \lim_{n\to\infty} \frac{1}{n} \left[\sum_{r=1}^{n} \frac{4r^2}{n^2} + \sum_{r=1}^{n} \frac{8r}{n} + \sum_{r=1}^{n} 3\right]$

$= \lim_{n\to\infty} \frac{1}{n} \left[4 \times \frac{n(n+1)(2n+1)}{6n^2} + \frac{8}{n} \times \frac{n(n+1)}{2} + 3n\right]$

$= \lim_{n\to\infty} \frac{1}{n} \left[4 \times \frac{n^3(1+1/n)(2+1/n)}{6n^2} + \frac{8n}{2}(1+1/n) + 3n\right]$

$= \lim_{n\to\infty} \left[\frac{2}{3} \times (1+1/n)(2+1/n) + 4(1+1/n) + 3\right]$

$= \frac{4}{3} + 4 + 3 = \frac{4}{3} + 7 = \frac{4+21}{3} = \frac{25}{3}$

30) $A = \begin{bmatrix} 0 & 1 \\ 1 & 1 \end{bmatrix}, B = \begin{bmatrix} 1 & 1 \\ 0 & 1 \end{bmatrix}$ ஆகிய இரண்டும் ஒரே வகையான பூலியன் அணிகள் எனில், A∨B மற்றும் A∧B ஆகியவற்றைக் காண்க.

**Answer :** A∨B = $\begin{bmatrix} 0 & 1 \\ 1 & 1 \end{bmatrix} \vee \begin{bmatrix} 1 & 1 \\ 0 & 1 \end{bmatrix} = \begin{bmatrix} 0 \vee 1 & 1 \vee 1 \\ 1 \vee 0 & 1 \vee 1 \end{bmatrix} = \begin{bmatrix} 1 & 1 \\ 1 & 1 \end{bmatrix}$

A∧B = $\begin{bmatrix} 0 & 1 \\ 1 & 1 \end{bmatrix} \wedge \begin{bmatrix} 1 & 1 \\ 0 & 1 \end{bmatrix} = \begin{bmatrix} 0 \wedge 1 & 1 \wedge 1 \\ 1 \wedge 0 & 1 \wedge 1 \end{bmatrix} = \begin{bmatrix} 0 & 1 \\ 0 & 1 \end{bmatrix}$

7 மட்டும். Q. No 40 7 x 3 = 21

31) A = $\begin{bmatrix} 0 & -3 \\ 1 & 4 \end{bmatrix}, B = \begin{bmatrix} -2 & -3 \\ 0 & -1 \end{bmatrix}$ எனக்கொண்டு $(AB)^{-1} = B^{-1}A^{-1}$ என்பதைச் சரிபார்க்க.

**Answer :** AB= $\begin{bmatrix} 0 & -3 \\ 1 & 4 \end{bmatrix} \begin{bmatrix} -2 & -3 \\ 0 & -1 \end{bmatrix} = \begin{bmatrix} 0+0 & 0+3 \\ -2+0 & -3-4 \end{bmatrix} = \begin{bmatrix} 0 & 3 \\ -2 & -7 \end{bmatrix}$

$(AB)_{-1} = \frac{1}{(0+6)} \begin{bmatrix} -7 & -3 \\ 2 & 0 \end{bmatrix} = \frac{1}{6} \begin{bmatrix} -7 & -3 \\ 2 & 0 \end{bmatrix}$ ...........(1)

$A_{-1} = \frac{1}{(0+3)} \begin{bmatrix} 4 & 3 \\ -1 & 0 \end{bmatrix} = \frac{1}{3} \begin{bmatrix} 4 & 3 \\ -1 & 0 \end{bmatrix}$

$B_{-1} = \frac{1}{(2-0)} \begin{bmatrix} -1 & 3 \\ 0 & -2 \end{bmatrix} = \frac{1}{2} \begin{bmatrix} -1 & 3 \\ 0 & -2 \end{bmatrix}$

$B_{-1}A_{-1} = \frac{1}{2} \begin{bmatrix} -1 & 3 \\ 0 & -2 \end{bmatrix} \frac{1}{3} \begin{bmatrix} 4 & 3 \\ -1 & 0 \end{bmatrix} = \frac{1}{6} \begin{bmatrix} -7 & -3 \\ 2 & 0 \end{bmatrix}$ .......(2)

அணிகள் (1) மற்றும் (2) சமம். எனவே $(AB)^{-1} = B^{-1}A^{-1}$ என்பது சரிபார்க்கப்பட்டது.

32) (2 + i)x + (1-i)y + 2i - 3 மற்றும் x+ (-1 +2i)y + 1+ i ஆகிய க கலப்பெண்கள் சமம் எனில் x மற்றும் y-ன் மெய்மதிப்புகளைக் காண்க.

**Answer :** $z_1$ =1(2 + i)x + (1 - i)y + 2i - 3 = (2x + y - 3) + i(x - y + 2) மற்றும்

$z_2$ = x + ( -1 + 2i)y + 1 + i = (x - y + 1) i(2y + 1) என்க.

$z_1 = z_2$ எனக் கொடுக்கப்பட்டுள்ளது.

எனவே, (2x + y - 3) + i(x - y + 2) = (x - y + 1) i(2y + 1)

மெய் மற்றும் கற்பனைப் பகுதிகளைச் சமப்படுத்த

2x + y - 3 = x - y + 2 ⇒ x + 2y = 4

x - y + 2 = 2y + 1 ⇒ x - 3y = -1

மேற்கண்ட சமன்பாடுகளைத் தீர்க்க

x = 2 மற்றும் y = 1 எனப்பெறலாம்.

33) $2x^2$-7x+13=0 எனும் இருபடிச் சமன்பாட்டின் மூலங்கள் α மற்றும் β எனில் $\alpha^2$ மற்றும் $\beta^2$ ஆகியவற்றை மூலங்களாகக் கொண்ட ஒரு இருபடிச் சமன்பாட்டை உருவாக்கவும்.

**Answer :** கொடுக்கப்பட்ட இருபடிச் சமன்பாட்டின் மூலங்கள் α மற்றும் β என்பதால் α+β=$\frac{7}{2}$ மற்றும் αβ=$\frac{13}{2}$ ஆகும்.

எனவே, தேவையான இருபடிச் சமன்பாட்டை பெற,

மூலங்களின் கூடுதல் =$\alpha^2+\beta^2 = (\alpha+\beta)^2 - 2\alpha\beta = \frac{-3}{4}$

மூலங்களின் பெருக்கல்=$\alpha^2\beta^2 = (\alpha\beta)^2 = \frac{169}{4}$

எனவே, தேவையான இருபடிச் சமன்பாடு $x^2 + \frac{3}{4}x + \frac{169}{4}$ =0 எனக் கிடைக்கிறது.

$4x^2$+3x+169=0

இதுவே $\alpha^2$ மற்றும் $\beta^2$ ஆகியவற்றை மூலங்களாகக் கொண்ட இருபடிச் சமன்பாடாகும்.

34) பின்வருவனவற்றிற்கு சார்பகம் காண்க

$f(x) = sin^{-1}\left(\frac{x^2+1}{2x}\right)$

**Answer :** கொடுக்கப்பட்ட f(x) = sin-1 $\left(\frac{x^2+1}{2x}\right)$

நமக்கு தெரியும் $\sin^{-1}(x)$-ன் சார்பகம் [-1,1]

$\Rightarrow -1 \le \frac{x^2+1}{2x} \le 1$

கருதுக $-1 \le \frac{x^2+1}{2x}$

$\Rightarrow 0 \le \frac{x^2+1}{2x} + 1 \Rightarrow \frac{x^2+1+2x}{2x} \ge 0$

$\Rightarrow \frac{(x+1)^2}{2x} \ge 0$ ⇒ x = -1 மற்றும் x < 0 .....(1)

கருதுக $\frac{x^2+1}{2x} \le 1 \Rightarrow \frac{x^2+1}{2x} - 1 \le 0$

$\Rightarrow \frac{x^2-1+2x}{2x} \le 0 \Rightarrow \frac{(x-1)^2}{2x} \le 0$

x = 1 மற்றும் x ≥ 0

(1) மற்றும் (2) விருந்து சார்பகம் = {-1,1}

35) ஒரு வட்டத்தின் சமன்பாடு 3x2+(a+1)y2+6x-9y+a+4=0 எனில் அதன் மையம், ஆரம் காண்க.

**Answer :** $x^2$-ன் கெழு=$y^2$-ன் கெழு (இருபடிச் சமன்பாட்டின் பண்பு (ii)-ன் படி)

ஆதலால் 3=a+1, a=2 எனக்கிடைக்கின்றது. எனவே வட்டத்தின் சமன்பாடு

$3x^2+3y^2+6x-9y+6=0$

$x^2+y^2+2x-3y+2=0$

மையம் $\left(-1, \frac{3}{2}\right)$ மற்றும் ஆரம் $r = \sqrt{1 + \frac{9}{4} - 2} = \frac{\sqrt{5}}{2}$.

36) ஒரு துகள் (1,2,3) எனும் புள்ளியிலிருந்து (5,4,1)எனும் புள்ளிக்கு $8\hat{i}+2\hat{j}-6\hat{k}$ மற்றும் $6\hat{i}+2\hat{j}-2\hat{k}$ என்ற மாறாத விசைகளின் செயல்பாட்டினால் நகர்த்தப்பட்டால், அவ்விசைகள் செய்த மொத்த வேலையைக் காண்க.

**Answer :** $\vec{F_1}$ மற்றும் $\vec{F_2}$ என்பன விசைகள் மற்றும் $\vec{d}$ என்பது இடப்பெயர்ச்சி

WHATSAPP – 80

வெக்டர் என்க.

$\therefore$ விளைவு விசை $\vec{F} = \vec{F}_1 + \vec{F}_2$

= $\left(8\hat{i} + 2\hat{j} - 6\hat{k}\right) + \left(6\hat{i} + 2\hat{j} - 2\hat{k}\right)$

$\vec{F} = 14\hat{i} + 4\hat{j} - 8\hat{k}$

மற்றும் $\vec{d}$ இடம் பெயர்ந்த புள்ளியிலிருந்து இடப்பெயர்வு

= $\left(5\hat{i} + 4\hat{j} + \hat{k}\right) - \left(\hat{i} + 2\hat{j} + 3\hat{k}\right)$

= $4\hat{i} + 2\hat{j} - 2\hat{k}$

செய்த வேலை $(W) = \vec{F}.\vec{d}$

= $\left(14\hat{i} + 4\hat{j} - 8\hat{k}\right).\left(4\hat{i} + 2\hat{j} - 2\hat{k}\right)$

= 56+8+16

= 80 அலகுகள்.

37) $t \geq 0$ எனும் எந்நேரத்திலும் ஒரு துகளின் நிலை
$s(t) = t^3 - 6t^2 + 9t + 1$ எனும்படி கிடைமட்டக் கோட்டில் ஒரு துகள் நகர்கிறது.
இங்கு s என்ப து மீட்டரிலும் t வினாடிகளிலும் க ணக்கிடப்படுகிறது.

(i) துகள் ஓய்வடையும் போது நேரம் என்ன ?

(ii) துகள் திசை மாறும் போது நேரம் என்ன ?

(iii) முதல் இரு வினாடிகளில் துகள் பயணிக்கும் மொத்த தூரம் எவ்வளவு?

**Answer :** $s(t) = t^3 - 6t^2 + 9t + 1$ ஐ வகையிட, v(t)= $3t^2$-12t+9 மற்றும் a(t)=6t-12 எனக் கிடைக்கிறது.

(i) v(t) = 0 எனும் போது துகள் ஓய்வினை அடைகிறது. எனவே , v(t)=3(t-1)(t-3)=0 என்பதன் மூலம், t=1 மற்றும் t=3 எனக்கிடை க்கிறது.

(ii) v (t) ஆனது குறியினை மாற்றும் போது துகளின் திசை மாறும். இப்பொழுது $0 \leq t \leq 1$ எனில் (t −1) மற்றும் (t-3)< 0 ஆகையால் v(t) > 0 ஆகும்.

1< t< 3 எனில் (t-1) > 0 மற்றும் (t-3)< 0 ஆகையால் v(t)< 0 ஆகும்.

t > 3 எனில் (t −1) மற்றும் (t-3) > 0 ஆகையால் v(t) > 0 ஆகும்.

எனவே t =1 மற் றும் t = 3 எனும் போது துகளின் திசை மா றும்.

(iii) t = 0 நேரத்திலிருந்து t = 2 வரை துகள் பயணிக்கும் மொத்த தூரம்,
$|s(0) - s(1)| + |s(1) + s(2)| = |1-5| + |5-3| = 6$ மீட்டர்கள் ஆகும்.

38) ஒரு சோப்பு நுரையின் வடிவம் கோளமாக உள்ளது என எடுத்துக் கொள்வோம். ஆரம் 5 செ மீ- இலிருந்து 5.2 செ மீ-ஆக மாறும் போது ஏற்படும் வளைபரப்பின் தோராய அதிகரிப்பை நேரியல் தோராய மதிப்பு முறையில் காண்க . மேலும் அதன் சதவீதப் பிழையையும் காண்க.

**Answer :** ஆரம் r உள்ள கோளத்தின் வளைபரப்பு S(r) = $4\pi r^3$என்பதை நினைவுகூர்க. நம்மால் சூத்திரத்தைப் பயன்படுத்தி சரியான மாற்றத்தைக் கணக்கிட முடியும் என்றாலும் நேரியல் தோராய மதிப்பு முறையைப் பயன்படுத்தி தோராய மதிப்பைக் காணலாம். சமன்பா டு (4)-ன்படி வளைபரப்பின் தோராய மாற்றம் = S(5.2) - S(5) ≈S'(5)(0.2)

= $8\pi$(5)(0.2)

=$8\pi$ செமீ$^2$

சரியான கணக்கீட்டின்படி வளைபரப்பின் மாற்றம் S(5.2) − S(5) = 108.16$\pi$-100$\pi$= 8.16 செமீ$^2$.

சதவீதப் பிழை = சார்பிழை x 100 = $\frac{8.16\pi - 8\pi}{8.16\pi}$ x 100 = 1.9607%

39) மதிப்பிடுக : $\int_1^2 \frac{x}{(x+1)(x+2)}$ dx

**Answer :** I = $\int_1^2 \frac{x}{(x+1)(x+2)}$ dx என்க.

I = $\int_1^2 \frac{-1}{(x+1)} + \frac{2}{(x+2)}$ dx (பகுதி பின்னமாக்குதல் பயன்படுத்தி)

= [- log(x+1) + 2 log(x+2)$]_1^2$

= log $[\frac{(x+2)^2}{x+1}]_1^2$

= log$\frac{16}{3}$ - log $\frac{9}{2}$

= log $\frac{32}{27}$

40) சீரான இரு பகடைகள் உருட்டப்படுவதாகக் கொள்வோம். X என்ப து இரு பகடை யில் கிடைக்கும் எண்களின் மொத்தக் கூட்டுத் தொகை எனில், (i) கூறுவெளி (ii) X எனும் சமவாய்ப்பு மாறி எடுக்கும் மதிப்புகள், (iii) 10-இன் நேர்மாறு பிம்பம், மற்றும் (iv) X-ன் நேர்மாறு பிம்பத்தில் உள்ள உறுப்புகளின் எண்ணிக்கை ஆகியவற்றைக் காண்க.

**Answer :** (i) கூறுவெளி

S = {1, 2, 3, 4, 5,6}×{1,2, 3, 4, 5, 6}, 36 வரிசைப்படுத்தப்பட்ட சோடிகள் (α, β)-இல் உள்ளன. இங்கு α மற்றும் β ஆகியவை 1 முதல் 6 வரை படத்திலிருப்பது போல் எந்தவொரு முழு எண் மதிப்பையும் பெறும். ஒவ்வொரு புள்ளி (α, β) என்பதற்கும் X என்பது பகடையின் மேலுள்ள எண்களின் கூடுதல் என ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அதாவது X (α, β) = α + β ஆகும்.

$$S = \left\{\begin{matrix} (1,1) & (1,2) & (1,3), & (1,4) & (1,5) & (1,6) \\ (2,1) & (2,2) & (2,3), & (2,4) & (2,5) & (2,6) \\ (3,1) & (3,2) & (3,3), & (3,4) & (3,5) & (3,6) \\ (4,1) & (4,2) & (4,3), & (4,4) & (4,5) & (4,6) \\ (5,1) & (5,2) & (5,3), & (5,4) & (5,5) & (5,6) \\ (6,1) & (6,2) & (6,3), & (6,4) & (6,5) & (6,6) \end{matrix}\right\}$$

எனவே

X(1,1) = 1 + 1 = 2

X(1,2) = X(2,1) = 3

X(1,3) = X(2,2) = X(3,1) = 4

X(1,4) = X(2,3) = X(3,2) = X(4,1) = 5

X(1,5) = X(2,4) = X(3,3) = X(4,2) = X(5,1) = 6

X(1,6) = X(2,5) = X(3,4) = X(4,3) = X(5,2) = X(6,1) = 7

X(2,6) = X(3,5) = X(4,4) = X(5,3) = X(6,2) = 8

X(3,6) = X(4,5) = X(5,4) = X(6,3) = 9

X(4,6) = X(5,5) = X(6,4) = 10

X(5,6) = X(6,5) = 11

X(6,6) = 12.

(ii) எனவே X எனும் சமவாய்ப்பு மாறி 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12 ஆகிய மதிப்புகளைப் பெறுகிறது.

(iii) 10-இன் நேர்மாறு பிம்பம் {(4, 6),(5, 5),(6, 4)} ஆகும்.

(iv) நேர்மாறு பிம்பங்களில் எண்ணிக்கை கீழே பட்டியலிடப்பட்டுள்ளது.

| சமவாய்ப்பு மாறியின் மதிப்புகள் | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நேர்மாறு பிம்பங்களில் உறுப்புகளின் எண்ணிக்கை | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 5 | 4 | 3 | 2 | 1 | 36 |

7 x 5 = 35

41) a) A= $\begin{bmatrix} 8 & -6 & 2 \\ -6 & 7 & -4 \\ 2 & -4 & 2 \end{bmatrix}$ எனில் A(adj A) =(adj A) = |A| $I_3$ என்பதைச் சரிபார்க்க.

**Answer :** |A| = $\begin{bmatrix} 8 & -6 & 2 \\ -6 & 7 & -4 \\ 2 & -4 & 2 \end{bmatrix}$ =8(21-16)+6(-18+8)+2(24-1c) =40-60+20=0

சேர்ப்பு அணியின் வரையறைப்படி கிடைப்பது

adj A= $\begin{vmatrix} (21-16) & -(18+8) & (24-14) \\ -(-18+8) & (24-4) & -(32+12) \\ (24-14) & -(32+12) & (56-36) \end{vmatrix}^T = \begin{vmatrix} 5 & 10 & 10 \\ 10 & 20 & 20 \\ 10 & 20 & 20 \end{vmatrix}$

எனவே,

A(adj A) = $\begin{bmatrix} 8 & -6 & 2 \\ -6 & 7 & -4 \\ 2 & -4 & 3 \end{bmatrix}\begin{bmatrix} 5 & 10 & 10 \\ 10 & 20 & 20 \\ 10 & 20 & 20 \end{bmatrix}$

= $\begin{bmatrix} 40-60+20 & 80-120+40 & 80-120+40 \\ -30+70-40 & -60+140-80 & -60+140-80 \\ 10-40+30 & 20-80+60 & 20-80+60 \end{bmatrix} = \begin{bmatrix} 0 & 0 & 0 \\ 0 & 0 & 0 \\ 0 & 0 & 0 \end{bmatrix}$ =0I$_3$ =|A|I$_3$ .

இதேபோல், நமக்குக் கிடைப்பது

(adj A)A = $\begin{bmatrix} 5 & 10 & 10 \\ 10 & 20 & 20 \\ 10 & 20 & 20 \end{bmatrix}\begin{bmatrix} 8 & -6 & 2 \\ -6 & 7 & -4 \\ 2 & -4 & 3 \end{bmatrix}$

= $\begin{bmatrix} 40-60+20 & -30+70-40 & 10-40+30 \\ 80-120+40 & -60+140-80 & 20-80+60 \\ 80-120+40 & -60+140-80 & 20-80+60 \end{bmatrix} = \begin{bmatrix} 0 & 0 & 0 \\ 0 & 0 & 0 \\ 0 & 0 & 0 \end{bmatrix}$ =0I$_3$ =|A|I$_3$ .

எனவே, A(adj A) = (adj A)A = |A| $I_3$ என்பது சரிபார்க்கப்பட்டது.

**(OR)**

b) மதிப்பு காண்க.

(i) cos$^{-1}$ $\left(-\frac{1}{\sqrt{2}}\right)$

ii) cos$^{-1}$$\left(cos\left(-\frac{\pi}{3}\right)\right)$

iii) cos$^{-1}$$\left(cos\left(\frac{7\pi}{6}\right)\right)$

**Answer :** cos$^{-1}$ x:[-1,1]→$[0,\pi]$ எனும் நேர்மாறு கொசைன் சார்பு வரையறையின்படி, cos$^{-1}$x=y எனில், எனில் மட்டுமே cos y=x. இங்கு

WHATSAPP – 8056206308

$\leq x \leq 1$ மற்றும் $0 \leq y \leq \pi$ ஆகையால்,

i) $\cos^{-1}\left(-\frac{1}{\sqrt{2}}\right)=\frac{3\pi}{4}$, ஏனெனில் $\frac{3\pi}{4} \in [0,\pi]$ மற்றும் $\cos\frac{3\pi}{4}$=cos

$\left(\pi = \frac{\pi}{4}\right) = -cos\frac{\pi}{4} = -\frac{1}{\sqrt{2}}$

ii) $\cos^{-1}\left(cos\left(-\frac{\pi}{3}\right)\right)=\cos^{-1}\left(cos\left(-\frac{\pi}{3}\right)\right)=\frac{\pi}{3}$,ஏனெனில் $-\frac{\pi}{3} \notin [0,\pi]$, ஆனால் $\frac{\pi}{3} \in [0,\pi]$

iii) $\cos_{-1}\left(cos\left(\frac{7\pi}{6}\right)\right)=\frac{5\pi}{6}$, ஏனெனில் $\cos\left(\frac{7x}{6}\right) = cos\left(\pi + \frac{\pi}{6}\right) = -\frac{\sqrt{3}}{2} = cos\left(\frac{5\pi}{6}\right)$ மற்றும்

$\left(\frac{5\pi}{6}\right) \in [0,\pi]$.

42) a) நிறுவுக: $(2+i\sqrt{3})^{10} + (2-i\sqrt{3})^{10}$ ஒரு மெய் எண் மற்றும் ii) $\left(\frac{19+9i}{5-3i}\right)^{15} - \left(\frac{8+i}{1+2i}\right)^{15}$ ஒரு முழுவதும் கற்பனை எண்.

**Answer :** i) z = $(2+i\sqrt{3})^{10} + (2-i\sqrt{3})^{10}$ என்க.

இதிலிருந்து, $\bar{z} = \overline{(2+i\sqrt{3})^{10}} + \overline{(2+i\sqrt{3})^{10}}$

= $\overline{(2+i\sqrt{3})}^{10} + \overline{(2+i\sqrt{3})}^{10}$ $(\because \overline{z_1 + z_2} = \bar{z_1} + \bar{z_2})$

= $(2+\bar{i}\sqrt{3})^{10} + (2-\bar{i}\sqrt{3})^{10}$ $(\because (\overline{z^n}) = (\bar{z})^n)$

= $(2+\bar{i}\sqrt{3})^{10} + (2-\bar{i}\sqrt{3})^{10}$ = z

$\bar{z}$= z ⇒ z ஒரு மெய்யெண் ஆகும்.

ii) $\left(\frac{19+9i}{5-3i}\right)^{15} - \left(\frac{8+i}{1+2i}\right)^{15}$ என்க.

இங்கு, $\frac{19+9i}{5-3i} = \frac{(19+9i)(5+3i)}{(5-3i)(5+3i)}$

= $\frac{(95-27)+i(45+57)}{5^2+3^2} = \frac{68+102i}{34}$

= 2 + 3i (1)

மற்றும், $\frac{8+i}{1+2i} = \frac{(8+i)(1-2i)}{(1+2i)(1-2i)}$

= $\frac{(8+2)+i(1-16)}{1^2+2^2} = \frac{10-5i}{5}$

= 2 - 3i (2)

இப்பொழுது, z = $\left(\frac{19+9i}{5-3i}\right)^{15} - \left(\frac{8+i}{1+2i}\right)^{15}$

⇒ z = $(2 + 3i)^{15} - (2 - 3i)^{15}$ ((1) மற்றும் (2)லிருந்து)

வரையறையிலிருந்து, $\bar{z}$ = $\overline{(2+3i)^{15} - (2-3i)^{15}}$

= $(2\bar{+}3i)^{15} - (2\bar{-}3i)^{15}$ (இணை எண் பண்புகளின்படி)

= $(2 + 3i)^{15} - (2 - 3i)^{15}$ = - $((2 + 3i)^{15} - (2 - 3i)^{15})$

⇒ z = −z.

ஆகவே, z = $\left(\frac{19+9i}{5-3i}\right)^{15} - \left(\frac{8+i}{1+2i}\right)^{15}$ என்பது முழுவதும் கற்பனை எண் ஆகும்.

**(OR)**

b) (1,1),(2,-1), மற்றும் (3,2) என்ற மூன்று புள்ளிகள் வழிச்செல்லும் வட்டத்தின் சமன்பாடு காண்க.

**Answer :** வட்டத்தின் பொதுச் சமன்பாடு $x^2+y^2+2gx+2fy+c=0$ ...(1)

இது (1.1),(2,-1) மற்றும் (3,2) என்ற புள்ளிகள் வழிச்செல்வதால்

2g+2f+c =-2, ...(2)

4g-2f+c=-5, ...(3)

6g+4f +c =-13 ...(4)

(2)-(3)-இலிருந்து -2g+4f=3. ...(5)

(4)-(3)-இலிருந்து 2g+6f=-8. ...(6)

(5)+(6)-இலிருந்து f=$-\frac{1}{2}$ என கிடைக்கும் மதிப்பை (6) இல் பிரதியிடg= $\frac{-5}{2}, f, g$ இன் மதிப்புகளை (2) இல் பிரதியிட c=4 எனவும் கிடைக்கிறது.

எனவே தேவையான வட்டத்தின் சமன்பாடு

$x^2 + y^2 + 2\left(-\frac{5}{2}\right)x + 2\left(-\frac{1}{2}\right)y + 4 = 0$

அதாவது $x^2+y^2-5x-y+4=0$.

43) a) 10 செமீ ஆரம் உள்ள கோளத்தின் ஆரம் 0.1செமீ குறைகின்றது எனில் அதன் கன அளவில் தோராயமாக எவ்வளவு குறையும்?

**Answer :** கோளத்தின் கன அளவு V = $\frac{4}{3}\pi r^3$ என நாம் அறிவோம். இங்கு r > 0 என்பது ஆரம். எனவே வகையீடு dV = $4\pi r^2$ dr மற்றும் ΔV ≈ dV எனவே

dV = $4\pi(10)^2$ (9.9-10) $cm^3$

= $4\pi 10^2$ (-0.1) $cm^3$

= $-40\pi$ $cm^3$ .

ஆரம் 10-இலிருந்து 9.9 ஆக குறைகின்றதால் dr = (9.9 -10)செ மீ எனப் பயன்படுத்தியுள்ளோம். மறுபடியும் விடையில் வரும் ' − ' குறியீடு கோளத்தின் கன அளவு $40\pi$ செமீ$^3$ குறைவதைக் குறிக்கின்றது.

**(OR)**

b) சமவாய்ப்பு மாறி X –இன் நிகழ்தகவு நிறை சார்பு f(x) என்பது

| x | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| f(x) | $\frac{1}{12}$ | $\frac{5}{12}$ | $\frac{5}{12}$ | $\frac{1}{12}$ |

எனில், (i) அதன் குவிவு பரவல் சார்பு காண்க. அதன் மூலமாக (ii) P(X ≤ 3) மற்றும்,

(iii)P (X ≥ 2) ஆகியவற்றைக் காண்க

**Answer :** (i)வரையறைப்படி தனிநிலை சமவாய்ப்பு மாறிக்கான குவிவு பரவல் சார்பு

$F(x) = \quad P(X \leq x) \quad = \sum_{x_i \leq x} P(X = x_i)$

P(X < 1) = 0, −∞ < x < 1.

$F(1) = \quad P(X \leq 1) = \sum_{x_i \leq x} P(X = x_i) = \sum_{-\infty}^{1} P(X = x) = P(X < 1) + P(X = 1) = 0 + \frac{1}{12} = \frac{1}{12}$. $F(2) = \quad P(X \leq$

$= 0 + \frac{1}{12} + \frac{5}{12} = \frac{1}{2}$.

$F(3) = \quad P(X \leq 3) = \sum_{-\infty}^{3} P(X = x) = P(X < 1) + P(X = 1) + P(X = 2) + P(X = 3)$.

$= 0 + \frac{1}{12} + \frac{5}{12} + \frac{5}{12} = \frac{11}{12}$.

$F(4) = \quad P(X \leq 4) = \sum_{-\infty}^{4} P(X = x) = P(X < 1) + P(X = 1) + P(X = 2) + P(X = 3) + P(X = 4)$. $= 0 + \frac{1}{12} + \frac{5}{12} + \frac{5}{12} + \frac{1}{12} =$

எனவே குவிவு பரவல் சார்பானது



$$f(x) = \begin{cases} 0, & -\infty < x < 1 \\ \frac{1}{12}, & 1 \leq x < 2 \\ \frac{1}{2}, & 2 \leq x < 3 \\ \frac{11}{12}, & 3 \leq x < 4 \\ 1, & 4 \leq x < \infty \end{cases}$$

(ii) $P(X \leq 3) = F(3) = \frac{11}{12}$.

(iii) $P(X \geq 2) = 1 = -P(X < 2) = 1 - P(X \leq 1) = 1 - F(1) = 1 - \frac{1}{12} = \frac{11}{12}$.

44) a) $x^3-9x^2+14x+24=0$ எனும் சமன்பாட்டின் இரு மூலங்கள் 3:2 என்ற விகிதத்தில் அமைந்தால், சமன்பாட்டை தீர்க்க.

**Answer :** α,β,$\gamma$ என்பது சமன்பாட்டின் மூலங்கள் என்க.

கொடுக்கப்பட்ட $\frac{\alpha}{\beta} = \frac{3}{2} \Rightarrow 2\alpha = 3\beta \Rightarrow \alpha = \frac{3}{2}\beta$

∴ $\frac{3}{2}\beta, \beta, \gamma$ என்பது கொடுக்கப்பட்ட சமன்பாட்டின் மூலங்கள் வியட்டாவின் சூத்திரப்படி,

$\frac{3}{2}\beta + \beta + \gamma = \frac{-b}{a} = \frac{-(-9)}{1}$

$\frac{5}{2}\beta + \gamma = 9 \Rightarrow \gamma = 9 - \frac{5}{2}\beta$

⇒ $\gamma=\frac{18-5\beta}{2}$ .........(2)

மேலும் $\frac{3}{2}\beta(\beta) + \beta\gamma + \left(\frac{3}{2}\beta\right)\gamma = \frac{c}{a} = \frac{14}{1}$ =14

⇒ $\frac{3}{2}\beta^2 + \frac{5}{2}\gamma$=14

⇒ $\frac{3}{2}\beta^2 + \frac{5}{2}\beta\left(\frac{18-5\beta}{2}\right)$=14 [(2) ஐ பயன்படுத்தி]

⇒ $\frac{3}{2}\beta^2 + \frac{90\beta}{4} - \frac{25\beta^2}{4}$=14

4 ஆல் பெருக்க $6\beta^2+90\beta-25\beta^2=56$

$19\beta^2-90\beta+56=0$

⇒ (β-4)(19β-14)=0

⇒ β=4

β=$\frac{14}{19}$

β =4 எனில் மற்ற மூலங்கள்

$\frac{3}{2}(4), 4, \frac{18-5}{2}(4)$

⇒ 6,4,-1

β =$\frac{14}{19}$ எனில் மற்ற மூலங்கள் $\frac{3}{2}\beta, \beta, \frac{18-5\beta}{2}$ [(2)-ன் படி]

WHATSAPP – 8056206308

$\Rightarrow \frac{3}{2}\left(\frac{14}{19}\right), \frac{14}{19}, \frac{18-5\left(\frac{14}{19}\right)}{2} \Rightarrow \frac{21}{19}, \frac{14}{19}, \frac{136}{19}$.



**(OR)**

b) பாசன வாய்க்கால் மீது அமைந்த சாலையில் 20மீ அகலமுடைய இரண்டு அரைவட்ட வளைவு நீர்வழிகள் அமைக்கப்பட்டன. அவற்றின் துணைத்தூண்களின் அகலம் 2மீ. படம் 5,16-ஐப் பயன்படுத்து அந்த வளைவுகளின் மாதிரிக்கான சமன்பாடுகளைக் காண்க.



**Answer :** அரைவட்ட வளைவு வழிகளின் மையப்புள்ளிகள் $O_1$ மற்றும் $O_2$ என்க.

முதல் வளைவு வழியின் மையம் $O_1(12,0)$ மற்றும் r=10. இதிலிருந்து அந்த அரைவட்டத்தைக் குறிக்கும் சமன்பாடு

(x-12)2+(y-0)2=102

$\Rightarrow x^2+y^2-24x+44=0, y > 0.$

இரண்டாம் வளைவு வழியின் மையம் O2 (34,0) மற்றும் ஆரம் r=10. முதல் வளைவு போல இரண்டாம் வளைவு வழியின் சமன்பாடு

$(x-34)^2+y^2=10^2$

$\Rightarrow x^2+y^2-68x+1056=0, y > 0.$

45) a) வெக்டர் முறையில் $\cos(\alpha - \beta) = \cos\alpha\cos\beta + \sin\alpha\sin\beta$ என நிறுவுக.

**Answer :**



$\hat{a} = \overrightarrow{OA}$ மற்றும் $\hat{b} = \overrightarrow{OB}$ என்பன அலகு வெக்டர்கள் என்க மற்றும் அவைகள் கோணங்கள் $\alpha, \beta$ வை x-அச்சின் மிகையுடன் ஏற்படுத்துகின்றன.AL மற்றும் BM $\perp'$ லிருந்து x அச்சு எனுமாறு வரைக

பிறகு $\left|\overrightarrow{OL}\right| = \left|\overrightarrow{OA}\right| cos\alpha = cos\alpha$

$\left|\overrightarrow{OL}\right| = \left|\overrightarrow{OA}\right| cos\alpha = cos\alpha$

$\left[\because \Delta OAL, sin\alpha = \frac{opp}{hyp} cos\alpha = \frac{adj}{hyp}\right]$

$\therefore \overrightarrow{OL} = \left|\overrightarrow{OL}\right| = cos\alpha\hat{i}$

$\overrightarrow{LA} = \left|\overrightarrow{LA}\right|\hat{j} = sin\alpha\hat{j}$

$\therefore \hat{a} = \overrightarrow{OA} = \overrightarrow{OL} + \overrightarrow{LA}$

[$\triangle$ விதியை பயன்படுத்தி கூட்டுக]

$\hat{a} = cos\alpha\hat{i} + sin\alpha\hat{j}$

அதை போல $\hat{b} = cos\beta\hat{i} + sin\beta\hat{j}$

$\hat{a}$ மற்றும் $\hat{b}$ க்கு இடையேயான கோணம் $(\alpha - \beta)$

$\therefore \hat{a}.\hat{b} = |\vec{a}|\left|\vec{b}\right| cos(\alpha - \beta) = cos(\alpha - \beta)$

$\left[\because |\vec{a}| = \left|\vec{b}\right| = 1\right]$

மேலும் $\hat{a}.\hat{b} = \left(cos\alpha\hat{i} + sin\alpha\hat{j}\right)\left(cos\beta\hat{i} + sin\beta\hat{j}\right)$

$\hat{a}.\hat{b} = cos\alpha cos\beta + sin\alpha sin\beta$

(3) மற்றும் (4) லிருந்து

$cos(\alpha - \beta) = cos\alpha cos\beta + sin\alpha sin\beta$

**(OR)**

b) (2,2,1), (9,3,6) ஆகிய புள்ளிகள் வழிச் செல்லக்கூடியதும் 2x+6y+6z=9 என்ற தளத்திற்குச் செங்குத்தாக அமைவதுமான தளத்தின் துணையலகு வெக்டர் சமன்பாடு மற்றும் கார்டீசியன் சமன்பாடுகளைக் காண்க.

**Answer :** கொடுக்கப்பட்ட தளம் புள்ளிகள் $\vec{a} = 2\hat{i} + 2\hat{j} + \hat{k}$ மற்றும் $\vec{b} = 9\hat{i} + 3\hat{j} + 6\hat{k}$ வழிச் செல்கிறது.

கொடுக்கப்பட்ட தளத்தின் சமன்பாடு $2x + 6y + 6z = 9$

இதை இவ்வாறு எழுதலாம் $\vec{r}.\left(2\hat{i} + 6\hat{j} + 6\hat{k}\right) = 9$

கொடுக்கப்பட்ட தளம் $2\hat{i} + 6\hat{j} + 6\hat{k}$ க்கு செங்குத்து ஆதலால், தேவையான தளம் $\vec{c} = 2\hat{i} + 6\hat{j} + 6\hat{k}$ க்கு இணை. ஆகையால் இரண்டு புள்ளி வழிச் செல்லும் மற்றும் வெக்டருக்கு இணையான தளத்தின் வெக்டர் சமன்பாட்டின் துணையலகு வடிவம் $\vec{r} = \vec{a} + s\left(\vec{b} - \vec{a}\right) + t\vec{c}, s, t\epsilon R$

$\vec{r} = 2\hat{i} + 2\hat{j} + \hat{k} + s\left(7\hat{i} + \hat{j} + 5\hat{k}\right) + t\left(2\hat{i} + 6\hat{j} + 6\hat{k}\right), s, t\epsilon R$

தளத்தின் கார்டீசியன் சமன்பாடு

$$\begin{vmatrix} x - x_1 & y - y_1 & z - z_1 \\ x_2 - x_1 & y_2 - y_1 & z_2 - z_1 \\ c_1 & c_2 & c_3 \end{vmatrix} = 0$$

$$\Rightarrow \begin{vmatrix} x - 2 & y - 2 & z - 1 \\ 7 & 1 & 5 \\ 2 & 6 & 6 \end{vmatrix} = 0$$

$\Rightarrow (x-2)(6-30) - (y-2)(42-10) + (z-1)(42-2) = 0$

$\Rightarrow (x-2)(-24) - (y-2)(32) + (z-1)(40) = 0$

$\Rightarrow -24x + 48 - 32y + 64 + 40z - 40 = 0$

$\Rightarrow -24x - 32y + 40z + 72 = 0$

$\div -8$ கிடைப்பது

3x+4y-5z-9=0 என்பது கார்டீசியன் வடிவம்.

$\therefore$ வெக்டர் சமன்பாட்டின் துணையலகு வடிவம்

$\vec{r} = \vec{r}.\left(3\vec{i} + 4\hat{j} - 5\vec{k}\right) = 9$

46) a) பின்வரும் வகைக்கெழுச் சமன்பாடுகளின் தீர்வுகளைக் காண்க:

(ydx - xdy) cot $\left(\frac{x}{y}\right)$ = n$y^2$ dx

**Answer :** சமன்பாட்டை $\left(\frac{ydx - xdy}{y^2}\right) cot\frac{x}{y} = ndx$ எனுமாறு எழுதலாம்.

$\frac{x}{y} = t$

$\frac{ydx - xdy}{y^2} = dt$

இம்மதிப்புகளை சமன்பாடு (1)ல் பிரதியிட

நாம் பெறுவது

$dtcott = ndx$

$cottdt = ndx$

இருபுறமும் தொகையிடக் கிடைப்பது

$\int cot \quad tdt = n\int dx$

$log(sint) = nx + c$

$sint = e^{nx+c}$

$\therefore sin\left(\frac{x}{y}\right) = e^{nx+c} \because t = \frac{x}{y}$

**(OR)**

b) $M = \left\{\begin{pmatrix} x & x \\ x & x \end{pmatrix} : x\epsilon R - \{0\}\right\}$ என்க. * என்பது அணிப் பெருக்கல் எனக் கொள்க. * ஆனது M –ன் மீது அடைவு பெற்றுள்ளதா எனத் தீர்மானிக்க.

WHATSAPP – 8056206308

அவ்வாறெனில், $*$ ஆனது M -ன் மீது பரிமாற்றுப் பண்பு, சேர்ப்புப் பண்புகளையும் நிறைவு செய்யுமா எனச் சோதிக்க.

**Answer :** (i) $M = \left\{ \begin{pmatrix} x & x \\ x & x \end{pmatrix} : x\epsilon R - \{0\} \right\}$ என்க

அடைவுப் பண்பு

$A = \begin{Bmatrix} x & x \\ x & x \end{Bmatrix} \varepsilon M$

$B = \begin{pmatrix} y & y \\ y & y \end{pmatrix} \varepsilon M$

எனவே, $AB = \begin{pmatrix} 2xy & 2xy \\ 2xy & 2xy \end{pmatrix}$

$x \neq 0, y \neq 0$ என்பதால் $2xy \neq 0$ என்பதைக் காண்கிறோம்.மேலும் $AB\varepsilon M$ .இது அணிப்பெருக்கலின் கீழ் M என்பது அடைவைப் பெற்றுள்ளது என்பதைக் காட்டுகிறது.

**பரிமாற்றுப் பண்பு:**

$AB = \begin{pmatrix} 2xy & 2xy \\ 2xy & 2xy \end{pmatrix}$

= BA எல்லா $A, B\varepsilon M$

இங்கு அணிப்பெருக்கல் என்பது பரிமாற்றுப் பண்பை நிறைவு செய்கிறது. (பொதுவாக அணிப்பெருக்கல் பரிமாற்றுப் பண்பை நிறைவு செய்வதில்லை)

சேர்ப்புப் பண்பு:

அணிப்பெருக்கல் எப்போதும் சேர்ப்புப் பண்பை நிறைவு செய்யும்.எனவே M-ன் மீது இப்பண்பை நிறைவு செய்கிறது.

47) a) s(t) = $2t^3$-$9t^2$+12t-4, இங்கு t ≥ 0 எனும் விதிப்படி ஒரு கோட்டில் ஒரு துகள் நகர்கிறது.

எந்நேரங்களில் துகளின் திசை மாறுகின்றது?

**Answer :** $s(t) = 2t^3 - 9t^2 + 12t - 4, t \leq 0$

திசைவேகம் $v = \frac{ds}{dt} = 6t^2 - 18t + 12$

துகளின் திசைவேகம் மாறும்போது v=0

$\therefore 6t^2 - 18t + 12 = 0$

$t^2 - 3t + 2 = 0$

$(t-2)(t-1) = 0$

$t = 1, 2$

$\therefore t = 1$ வினாடி மற்றும் t=2 வினாடி எனும்போது,துகளின் திசை மாறுகிறது.

(OR)

b) கோடு y = 2x + 5 மற்றும் பரவளையம் y = $x^2$ - 2x ஆகியவற்றால் அடைபடும் அரங்கத்தின் பரப்பைக் காண்க.

**Answer :** முதலில் $y = 2x + 5$ மற்றும் $y = x^2 - 2x$ ஆகியவை வெட்டும் புள்ளிகளைக் காண

$x^2 - 2x = 2x + 5$

$x^2 - 4x - 5 = 0$

$(x-5)(x+1) = 0$

$x = 5, x = -1$

x=5 எனும்போது y=15

x=-1 எனும்போது y=3

(5,-15),(-1,3) என்பன வெட்டும் புள்ளிகள்



தேவையான பரப்பு = $\int_a^b (y_L - y_C)\, dx$

= $\int_{-1}^5 (2x+5)\, dx \int_{-1}^5 \left(x^2 - 2x\right) dx$

= $\left[\frac{2x^2}{2} + 5x\right]_{-1}^5 - \left[\frac{x^3}{3} - \frac{2x^2}{2}\right]_{-1}^5$

= $[25 + 25 - 1 + 5] - \left[\frac{125}{3} - 25 + \frac{1}{3} + 1\right]$

= 54-18

= 36


12TH SAMACHEER KALVI WHATSAPP - 8056206308

| STUDY MATERIAL | EACH PDF COST RS.350 | MODEL PAPER | EACH PDF COST RS.350 |
|---|---|---|---|
| MATHS | | 150 PAPERS | |
| PHYSICS | | 101 PAPERS | |
| CHEMISTRY | | 104 PAPERS | |
| BIOLOGY | | 123 PAPERS | |
| ACCOUNTANCY | | 55 PAPERS | |
| COMMERCE | | 63 PAPERS | |
| ECONOMICS | | 60 PAPERS | |
| BUSINESS MATHS | | 101 PAPERS | |

JOIN MY 12TH WHATSAPP PAID TEST GROUP WITH ANSWERS.ONE TIME FEES RS.2000

WHATSAPP 8056206308

MONTHLY FEES STRUCTURE ALSO AVAILABLE

WHATSAPP – 8056206308